இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 57 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – புரட்டாசி 20 – ஞாயிற்றுக்கிழமை 06 அக்டோபர் 2024 – கோவை ★★ 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 57 : Thiruvalluvar Year - 2055 - Purataasi 20 - Sunday 06 October 2024 - Kovai ★★ 16 Pages ₹ 5.00

## நீர்வளத்துறை சார்பில் 8 மாவட்டங்களில்

# ரூ. 83.19 கோடியில் 19 திட்டப் பணிகள்!


## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, அக்.6 -**

**நீர்வளத்துறை சார்பில் 8 மாவட்டங்களில் ரூ.83.19 கோடி செலவில் நிறைவேற்றப்பட்ட 19 திட்டப் பணிகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.10.2024) தலைமைச் செயலகத்தில், நீர்வளத்துறை சார்பில் 8 மாவட்டங்களில் 83 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பணைகள், புனரமைக்கப்பட்ட வாய்க்கால்கள், அணை மறுகட்டுமானப் பணி, புதிய குளம், புதிய அலுவலகக் கட்டடம் உள்ளிட்ட 19 நிறைவேற்றப்பட்ட திட்டப் பணிகளைத் திறந்து வைத்தார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் விவசாயத்தை மேம்படுத்தும் வகையிலும், மக்களின் குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், கிடைக்கப்பெறும் நீரை வீணாக்காமல் நீர்நிலைகளில் தேக்கி வைக்கும் பொருட்டும், புதிய நீராதாரங்களை உருவாக்கிடவும் தமிழ்நாடு அரசு, நீர்வளத் துறை மூலமாக பல்வேறு பாசன மேம்பாட்டுத் திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.10.2024) தலைமைச் செயலகத்தில், நீர்வளத்துறை சார்பில் 8 மாவட்டங்களில் 83 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பணைகள், புனரமைக்கப்பட்ட வாய்க்கால்கள், அணை மறுகட்டுமானப் பணி, புதிய குளம், புதிய அலுவலகக் கட்டடம் உள்ளிட்ட 19 நிறைவேற்றப்பட்ட திட்டப் பணிகளைத் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், நீர்வளத்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் சா. மன்மதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**நீர்வளத்துறையில் 19 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தல்**

அந்த வகையில், திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், கவுண்டையன்வலசு கிராமம் அருகில் அமராவதி ஆற்றின் குறுக்கே 11 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பணை;

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், மாம்பாடிபுங்கந்துறை கிராமம் அமராவதி ஆற்றில் 11 கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பணை;

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், கொளப்பாக்கம் கிராமத்தில், கொளப்பாக்கம் கால்வாய் 1 முதல் கொளப்பாக்கம் - பொழிச்சலூர் சாலையில் இணைப்பு ஓடை வரை 11 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மூடிய வடிவிலான கால்வாய்;

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், உள்ளாவூர் கிராமத்தின் அருகே தொள்ளாழி மடுவின் குறுக்கே 7 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அணைக்கட்டு;

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், இருமரம் கிராமத்தின் அருகே புத்தளி மடுவின் குறுக்கே 3 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை;

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், அய்யம்பாளையம் கிராமத்தில் 4 கோடியே 71 இலட்சம் ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்பட்ட அய்யம்பாளையம் ராஜவாய்க்கால்;

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், குளத்தூர் கிராமம், சந்தானவர்த்தினி ஆற்றின் குறுக்கே 3 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பணை;

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், தாசாரிபட்டி கிராமம், முத்துபூபால சமுத்திரம் கண்மாய்க்கு நீர் வழங்க பாலாத்து ஓடையின் குறுக்கே 3 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அணைக்கட்டு;

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம், பொன்னிமான்துறை உட்கடை சிந்தலக்குண்டு கிராமத்தில் குடகனாற்றின் குறுக்கே 3 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பணை;

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், அரசப்பிள்ளைபட்டி கிராமம், நங்காஞ்சி ஆற்றின் குறுக்கே 2 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பணை;

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், நிலக்கோட்டை கிராமம், கொங்கர் குளம் மற்றும் நூத்துலாபுரம் கிராமம், பாப்பன்குளம் கண்மாய்களுக்கு செங்கட்டான் குளம் கண்மாய் உபரிநீர் வழங்கும் பகிர்மான அணையினை 1 கோடியே 77 இலட்சம் ரூபாய் செலவில் முடிவுற்ற மறு கட்டுமானப் பணி மற்றும் வெள்ளத்தடுப்புச் சுவர்;

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை வட்டம், கஸ்தூரிரெங்கபுரம் கிராமம் பகுதி 2இல் 4 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய குளம்;

திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளில் வெள்ளநீர் சூழ்வதை தடுக்கும் வகையில் திருப்பணிகரிசல்குளம் வெள்ள நீரை 3 கோடியே 79 இலட்சம் செலவில் முடிவுற்ற நெடுங்குளம், மேகமுடையார் குளம் வழியாக சத்திரம் புதுக்குளம் கண்மாய்க்கு திருப்பும் பணி;

பெரம்பலூர் மாவட்டம் மற்றும் வட்டம், விளாமுத்தூர் கிராமத்தில், மருதையாற்றின் குறுக்கே 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை;

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், வடக்கிபாளையம் கிராமத்தில் கோதவாடி ஓடையின் குறுக்கே 2 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பணை;

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், வடக்கு கல்மேடு கண்மாயில் 1 கோடியே 46 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்புப் பணி;

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி வட்டம், பேரூரணி அணைக்கட்டில் 1 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்புப் பணி; தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் வட்டம், சம்பன்குளம் ஏரியின் வழங்கு வாய்க்காலின் இடது கரையில் 50 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்புப் பணிகள்;

திருச்சி மாவட்டத்தில் 1 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தரக்கட்டுப்பாடு கோட்ட தலைமையிட உபகோட்டத்துடன் புதிய அலுவலகக் கட்டடம்; **என மொத்தம் 83 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் நீர்வளத்துறை சார்பில் நிறைவேற்றப்பட்ட 19 திட்டப் பணிகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், நீர்வளத்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் சா.மன்மதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கவிஞர் மு.மேத்தா - பின்னணிப் பாடகி பி.சுசீலாவுக்கு ‘கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது!’

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, அக். 6-**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவினைப் போற்றிடும் வகையில் கவிஞர் மு. மேத்தா மற்றும் பின்னணிப் பாடகி திருமதி பி.சுசீலா ஆகியோருக்கு “கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுகள்” தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்.**





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.10.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கிடும் வாழ்நாள் சாதனையாளர்களைப் போற்றிப் பாராட்டிடும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் 2023ஆம் ஆண்டிற்கான **“கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுகளை”** கவிஞர் மு.மேத்தா அவர்களுக்கும், பின்னணிப் பாடகி திருமதி பி.சுசீலா அவர்களுக்கும் வழங்கி சிறப்பித்தார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் 2022–2023ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கிடும் வாழ்நாள் சாதனையாளர்களைப் போற்றிப் பாராட்டிடும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் **“கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது”** ஒவ்வொரு ஆண்டும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் திங்கள் 3ஆம் நாளான்று வழங்கப்படும் என்றும், தேர்ந்தெடுக்கப்படும் விருதாளர்களுக்கு 10 இலட்சம் ரூபாயும், நினைவுப் பரிசும் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினைச் செயல்படுத்துகின்ற வகையில், முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், விருதாளர்களைத் தேர்வு செய்யும் பொருட்டு, திரைப்பட இயக்குநர் எஸ்.பி.முத்துராமன் அவர்கள் தலைமையில், நடிகர் சங்கத் தலைவர் நாசர், திரைப்பட இயக்குநர் கரு.பழனியப்பன் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

அக்குழுவின் பரிந்துரையின்படி 2022ஆம் ஆண்டிற்கான “கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதிற்கு” தெரிவு செய்யப்பட்ட திரைப்படத் துறையில் சுமார் 500 திரைப்படங்களுக்கு மேல் கதை, திரைக்கதை, வசனம் எழுதிப் புகழ்பெற்ற ஆரூர்தாஸ் அவர்களுக்கு கடந்த 3.6.2022 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் அவர்கள் கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதினை வழங்கிச் சிறப்பித்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, வழக்கமாக வழங்கப்படும் கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுடன், சிறப்பினமாகப் பெண்மையைப் போற்றும் வகையில் இந்த ஆண்டு கூடுதலாக ஒரு பெண் திரைக்கலைஞருக்கும் இந்த விருதினை வழங்கிச் சிறப்பித்திட முதலமைச்சர் அவர்கள் 11.07.2024 அன்று உத்தரவிட்டிருந்தார்.

அதன்படி, திரையுலகில் 20,000க்கும் மேற்பட்ட பலமொழிப் பாடல்களைப் பாடியவரும், “தென்னிந்தியாவின் இசைக்குயில்” என்றும், “மெல்லிசை அரசி” என்றும் பாராட்டப்பட்டவருமான திரைப்படப் பின்னணிப் பாடகி திருமதி. பி.சுசீலா அவர்களுக்கும், தமிழ்ப் பேராசிரியரும், புதுக்கவிதைக்கு ஏற்றம் தந்தவரும், சாகித்ய அகாடமி விருது பெற்றவருமான கவிஞர் மு.மேத்தா அவர்களுக்கும், 2023ஆம் ஆண்டிற்கான **கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுகள்** வழங்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் 24.9.2024 அன்று அறிவிப்பு வெளியிட்டார்.

அந்த அறிவிப்பின்படி, முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் தினம், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவாக கவிஞர் மு.மேத்தா அவர்களுக்கும், பின்னணி பாடகி திருமதி. பி.சுசீலா அவர்களுக்கும் 2023ஆம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுடன் தலா 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையும், நினைவுப் பரிசும் வழங்கி சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஒரு கேள்வி; ஒரு பதில்!

**கேள்வி:** “சனாதன தர்மத்தை ஒழிப்பேன் என்பவர்கள் அழிந்து போவார்கள்” - என ஆந்திராவின் துணை முதல்வர் பவன் கல்யாண் கூறியது குறித்து தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதியிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, ‘Wait & See’ (பொறுத்திருந்து பாருங்கள்) என்று கூறியிருக்கிறாரே! அதன் பொருள் என்ன?

**பதில்:** அழிந்து போவார்கள் என பவன் கல்யாண் கூறியபடி அழிந்து போகிறார்களா இல்லையா எனப் பொறுத்திருந்து நீங்களே பார்த்து தெரிந்து கொள்ளுங்கள் என்ற பொருளில் சுருக்கமாக பதில் கூறியிருக்கலாம்.